T-VN-629

வேதாந்த தீபிகையின் மறுபதிப்பு.

# ஸ்ரீ ஆதிவண் சட்கோப யதீந்த்ர மஹாதேசிகன் வைபவம்.

சே. லக்ஷ்மீ நரஸிம்மா சார்யனால்
எழுதப்பட்டது

சென்னை
கலாரத்னாகரம் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1926.

வேதாந்த தீபிகையின் மறுபதிப்பு.

# ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் வைபவம்.

சே. லக்ஷ்மீ நரஸிம்மா சார்யனால்
எழுதப்பட்டது

சென்னை
கலாரத்னாகரம் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1926.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே வேதாந்த குரவே நம:

ஸ்ரீமதே ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:

# ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் வைபவம்.

---

விததவிவிதபக்தே வேதமார்க்கா விஹாரே
விமல குணவதீதே வீதராகாநு பக்தே |
பவதரணவிதௌ தே தோஷா ஸக்திர்புவா மநீஷா
மமவிநமதிஜிஹ்வா ப்ரஹ்மணி ஸ்ரீந்ருஸிம்ஹே |

ஹ்ருதயகமல கிம்வா ஹம்ஸகம் வஹ்நிமாஸீம்
நரஹரி ருசிராங்கோ தேவதா ஸார்வபௌம: |
சடரிபுயதிஹ யஸ்ய ப்ரேஷகோ தேவ தேசம்
[illegible] ||

இன்றைக்கு 550 வருஷங்களுக்குமுன் இப்புனிதநாட்டிலே நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் ஸர்வகல்யாணகுணோபேதராய் ஜகதுஜ்ஜீவனார்த்தம் சாஸ்திரங்களைப் பிரவர்த்திப்பித்த ஓர்மஹான் அவதரித்தார். அம்மாஹானைப்போற்றி அன்னார் வழிப்பட்டு அன்னார் ஏற்றிய ஜ்ஞானதீபத்தைக் கொண்டு அஜ்ஞானத்தைப் போக்கி நித்ய விபூதியான மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை யெய்தினோர் லக்ஷக்கணக்கானபேர்கள். இன்னும் அன்னார் சரணாரவிந்தங்களைப்போற்றி உய்வோர் கணக்கிலர். அப்படிப்பட்ட அவதாரபுருஷன் திருநாமத்தால் அலங்கரிக்கப்பட்டதான ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் ஸம்மானம் என்ற ஒரு வெகுமானம் ராவ் ஸாகிப் ஸ்ரீ. உபய வே. திட்டை ஸ்ரீநிவாஸராகவாசாரிய ஸ்வாமியால் அவர் சொந்ததிரவியத்தைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டு சென்னை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த சபையாரால் விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதில் சென்ற மூன்று வருஷ வெகுமானத்தை ஒருங்கே சேர்த்து 'ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த பரமபதஸோபானம்' என்றஅரிய நூலை ஒரு தமிழ் வியாக்கியானத்துடன் வெளியிடுவதில் செலவிடப்பட்டது. அந்

நூலுக்கு முன்னணியலங்காரமாகக் கீழ்கண்ட ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிக வைபவச்சுருக்கம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

தென்னாட்டின் மேல்புரத்தில் தற்காலம் மைசூர் ஸமஸ்தானத்தைச் சேர்ந்ததாகவிருக்கும் திருநாராயணபுரத்தில் ஸ்ரீபகவத் ராமாநுஜ நிகமாந்த மஹாதேசிகப் பிரதிஷ்டாபித ஸித்தாந்தப் பிரவர்த்தன துரந்தரராய் ஸ்ரீகேசவாசார்யர் என்று ஒரு ஸ்வாமி எழுந்தருளியிருந்தார். இந்த ஸ்வாமி ஸ்ரீபாஷ்யகாரர் தொடங்கி பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை இவர்கள் மூலமாய் ஓரான்வழியாக வந்த ஸ்ரீபகவத்விஷய பரம்பரையில் பிரஸித்தரும், ஈடு என்ற முப்பத்தாராயிரப்படி கிரந்தத்துக்கு பிரவர்த்தகருமான, வடக்குத் திருவீதிப்பிள்ளையின் முக்கிய சிஷ்யரும், திராவிடாம்நாயதேசிகனென்று வழங்கப்படுபவருமான கிடாம்பி ஸ்ரீரங்காசாரியரின் பௌத்திரர். [ஸ்ரீரங்காசாரியர் முதல் அவ்வம்சத்தினருக்கு இன்னும் த்ராவிடாம்நாயதேசிகன் என்றும், திரவிடாகாதாசாரியர் என்றும், திருவாய்மொழி ஆசாரியர் என்றும் பிருது ஏற்பட்டுவருகிறது.] இந்த கேசவாசாரியருக்கு கலி 4480-ம் 1378-கி.பி. வருஷத்தில் ஸித்தார்த்தி நாமஸம்வத்ஸரம் புரட்டாசிமீ சுக்லபஞ்சமி குருவாரம் ஜ்யேஷ்டாநக்ஷத்திரம் தனுர்லக்கினத்தில் ஒரு புத்திரர் அவதரித்தார். விதிப்படி அக்குழந்தைக்கு ஜாதகர்மம், நாமகரணம் முதலியவை செய்யப்பட்டன. திருவேங்கடமுடையான் அனுக்ரஹ விசேஷத்தால் இப்புத்திரர் அவதரித்தாரென்று கருத்துக்கொண்டு குழந்தைக்கு ஸ்ரீநிவாஸாசாரியரென்று திருநாமம் சூட்டப்பட்டது. பிறகு குழந்தைக்கு அன்னப்பிராசன, சௌள, அக்ஷராப்யாஸ, உபநயனாதிகள் தத்தத்காலங்களில் செய்விக்கப்பட்டன. விளையும்பயிர் முளையிலேயென்ற ஆன்றோர் மொழிக்கிணங்க இந்த ஸ்ரீநிவாஸாசாரியர் தம் பிற்காலத்தில் ஜகதாசாரியனாய் ஸம்பிரதாயப் பிரவசனம்செய்து ஸ்ரீராமாநுஜதர்சனத்தை ஓங்கச் செய்யப்போகிறாரென்பதற்கு அறிகுறியாக அவருடைய அதிபால்யதசையிலேயே அவர் அதிமேதாவியாய் ஸகல ஸாமான்ய சாஸ்திரங்களையும் கசடற அப்யஸித்தார். தமது திருத்தகப்பனாரிடமே இவர் பஞ்சஸம்ஸ்காரங்களைப்பெற்றார். சாஸ்திரஜ்ஞானத்தில் இவருக்கு அதிநைபுண்யமும் பிரஸித்தியும் ஏற்பட்டது. ஸ்ரீராமாநுஜ தர்சனத்திலும் இவர் அதிக ஊக்கம் காட்டலானார். த்ரவிடாகாதாசாரியரென்று பரம்பரையாகப் பிரஸித்தி பெற்ற தமது தந்தையான ஸ்ரீகேசவாசாரியரிடமே ஸ்ரீபகவத்விஷயத்தை இந்த ஸ்வாமி பூர்த்தியாக காலக்ஷேபம் செய்து அதிலடங்கிய சாஸ்திரார்த்தங்களைக் கிரஹித்தார். அதன் பின்னர் இவருடைய விசேஷஜ்ஞானத்தையும் பிரதிபையையும் ஸ்ரீகேசவாசாரியர்கண்டு மகிழ்ந்து, ஸ்ரீநடாதூரம்மாள் பௌத்ரரான கடிகாசதம் அம்மாள் என்று பிரஸித்தி பெற்ற வாத்ஸ்ய வரதாசாரியரிடம் வேதாந்த காலக்ஷேபம் செய்யுமாறு தமது புத்திரரை அனுப்பிவைக்க, ஸ்ரீஅம்மாளும் இவருடைய ஆத்ம

குணபூர்த்தியையும் சாஸ்திரஜ்ஞானத்தையும் கண்டு, மிகவும் ஸந்துஷ்டராய் இவருக்கு ஸ்ரீபாஷ்யம் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் முதலிய ஸம்பிரதாயக்ரந்தங்களை விசேஷார்த்தங்களுடன் காலக்ஷேபம் ஸாதிக்க, ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசார்யரும் அம்மாள் ஸாதித்தவாறே அனைத்தையும் கிரஹித்து அதிபால்யதசையிலேயே மிகப்பிரஸித்தராயும் பஞ்சகால பராயணராயும் உபய வேதாந்த காலக்ஷேபபரராயும் எழுந்தருளியிருந்தார். இதற்குள் ஸ்வாமிக்கு யோகசாஸ்திரத்தில் பிரவிருத்தி ஏற்பட்டு அவர் திருநாராயணபுரத்தில் யதுகிரியிலுள்ள ஒருபிலத்தில் எழுந்தருளியிருக்கும் யோகாநந்த ந்ருஸிம்ஹன் ஸன்னிதியில் யோகம் அப்யஸித்து அதில் ஸ்ரீமந்நாதமுனி ஸ்ரீபாஷ்யகாரப் பிரபிருதிகள்போல் ஸாதனமும் பெற்றார்.

இப்படி ஸ்வாமிக்கு திருநக்ஷத்திரம் இருபது ஆவதற்குள்ளாக, ஜ்ஞானபரிபூர்த்தியும், லக்ஷ்மீநாதமூலமாயும் அநாத்யவிச்சின்னமுமான தமது தர்சனத்தைத் தழைக்கச்செய்யவேண்டுமென்ற அவாவும், மிகுதியாக நாளுக்கு நாள் அதிகரிக்கலாயிற்று. ஸ்ரீபகவத் ராமாநுஜனும் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனும் ஸ்ரீபகவத் ஸம்பிரதாய வளர்ச்சிக்காகப்பட்டுள்ள பரிசிரமங்கள் இவருடைய உள்ளத்தில் பதிந்தன. அவர்களைப்போல் தாமும் அவர்கள் காத்துவந்த முத்திநெறியான நன்னெறியை வளர்த்து, வேறு சமயத்தினரால் அதற்கு ஏற்படும் தீங்கைக் களையவேண்டுமென்று இந்த ஸ்வாமியின் திருவுள்ளத்தில் பட்டது. கோடிக்கணக்கான ஜீவராசிகள் உஜ்ஜீவிக்கும் வழியறியாது, சிலர் ப்ரம விப்ரலம்பமூலமான கட்டுரைகளுக்குட்பட்டும், வேறுசிலர் கேவலம் இந்திரியசுகங்களில் மோஹமுள்ளவர்களாய் அந்தகாரத்தில் மூழ்கியிருந்ததும் ஸ்வாமியின் திருவுள்ளத்தை வாட்டிற்று. ஆகவே ஸ்வாமி பால்யதசையிலிருந்தவராயினும் 'வூஸமெநஷ ஶேரஷூ ணாம் ஷூஶம்ஹவதி ஷ்ஃவிதः' என்றபடி பிறர் துக்கங்களைக்கண்டு இவர் மிகவும் துக்கிதராய் சேதனர்களின் துக்கங்களைப் போக்கடிக்கவேண்டி "உள்ளமுறைசெயல் உள்ளவிம்மூன்றையும் உள்ளிக்கெடுத்திறை யுள்ளிலொடுங்கே" என்றபடி சரண்யதம்பதிகளை ஆச்ரயித்து உஜ்ஜீவிக்குமாறு செய்யவேண்டுமென்ற ஒரு எண்ணம் ஸ்வாமியின் திருவுள்ளத்தில் குடிகொண்டது. இப்படி ஸ்வாமி தமதிளம்பிராயத்திலேயே ஸ்வார்த்த பரமாகவோ லௌகிகபோகங்களிலோ பிரவிருத்தியின்றி இஹத்தில் லோகோஜ்ஜீவனத்தையே பெரிய புருஷார்த்தமாகக் கருதியிருக்குங்கால் 'ஸுஹோபிலே ஶாஶ்வ ஶெஷூ ஶஜ்ஞ' என்றும் 'சிங்கவேழ்குன்றமே' என்றும் 'செங்கணுளியிட்டிறைஞ்சும் சிங்கவேழ் குன்றுடையான்' என்றும் மஹாபிரஸித்த வைபவத்தையுடையவரும் ஸ்ரீமதஹோபிலத்தில் நித்திய வாஸரஸிகருமான ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்மன் லோகோஜ்ஜீவனார்த்தம் தாமே ஜனபதக்கிராமங்கள்தோறும் எழுந்தருளத்திருவுள்ளம்பற்றி, தம்மை சேத

னர்கள் ஆராதிக்கப் புருஷகாரமாக ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசாரியரை நியமித்தருளலா மென்று ஸங்கல்பித்துக் கொண்டவாறே, ஒரு நாளிரவு ஸ்ரீநிவாஸாசாரியரு டைய ஸ்வப்னத்தில் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்மன் ஸேவை ஸாதித்து லோகோஜ்ஜீ வன வியாபாரத்தில் தமக்குப் புருஷகாரமாகவிருக்கக்கூடியவர் அவரேயென் றும்,ஆகையால் தம்மை அவர் வந்து திருவடித்தொழுது ஆராதிக்க முன்வர வேண்டுமென்றும்,அவருக்குத்தாம் துரியாச்ரமம் தந்தருளுவதாகவும், அவருக் குநியமித்தருளி அந்தர்த்தானமாக ஸ்ரீ ஸ்ரீநிவாஸா சாரியரும் "யமி ந்ராஸி" என்று பகவந்நியமனத்தைப்பெற்று கிருதார்த்தரானே மென்று உள்ளம் பூரித்து, விடிந்தவாறே தம்மாசார்யர் முதலானோரிடம் விஷயத்தை விஜ் ஞாபித்தார். அவர்களும் ஸ்ரீ அழகியசிங்கர் நியமனப்படி நடந்துகொள்ளு மென்று ஸ்ரீ ஸ்ரீநிவாஸா சாரியருக்கு நியமிக்க அந்த ஸ்வாமியும் ஆசார்ய நியமனம் பெற்றுக்கொண்டு பலபரிஜனங்களுடன் ஸ்ரீமதஹோபிலத்தை நோக்கி யாத்திரையானார். அங்குசென்று பவநாசினியில் நீராட்டம் செய்த ருளி, அந்த ஸ்தலத்திலுள்ளோரிடம் பகவந்நியமனத்தைத் தெரிவித்து தேஜிஷ்டராய் விளங்காநிற்க "அஹோபிலே ஸ்ரீந்ருஸிம்ஹ: ப்ரத்யக்ஷ ஸம் யதிரூபேண..." என்கிறபடியே ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம் மன் ஒரு யதிரூபியாய் எழுந்தருளி ஸ்ரீ ஸ்ரீநிவாஸா சாரியருக்கு 20-வது திருநக்ஷத்திரமான பகுதான்ய வருஷம் புரட்டாசி மாதம் சுக்லபஞ்சமி யில் உதயகாலத்தில் பிரேஷ மந்திரத்தை உபதேசித்தருளி ஸந்யாஸாச் ரமத்தையும் யதாக்கிரமமாய்ப் பண்ணிவைத்து தம்முடைய ஸன்னிதியில் எழுந்தருளியிருந்த ஸ்ரீபாஷ்யகாரருடைய த்ரிதண்ட காஷாயங்களையும் இவ ருக்குப் பிரஸாதித்தருளி ஸ்ரீசடகோப ஜீயரென்று தாஸ்யநாமமும் பிர ஸாதித்து தமது திருக்கைகளிலிருந்த திருவாழி திருச்சங்குகளையும் ஆச் ரயிஷ்யமான சிஷ்யவிசேஷ ஸம்ஸ்காரார்த்தமாகப் பிரஸாதித்து, தம்மை ஆராதித்துக்கொண்டு பிரதிக்கிராமம்தோறும் ஸஞ்சரித்து ஆச்ரித ஜனங்க ளுக்கு திருவிலச்சினை, மந்திர மந்திரார்த்தப் பிரதிபாதனம், பரந்யாஸம் முதலான உஜ்ஜீவன வியாபாரங்களைச்செய்து வருமாறு நியமித்துவிட்டு அந்தர்தானமானார்.

ஸ்ரீசடகோபஜீயரும் அதன்பேரில் பவநாசினியில் நித்ய கர்மாநுஷ்டா னங்களை முடித்துக்கொண்டு "ஜ்வாலாஹோபில மாலோல க்ரோட கா ரஞ்ச பார்கவ: । யோகாநந்த க்ஷத்ரவட: பாவநா நவமூர்த்தய: ॥" என்று பிரஸித்தரான ஸ்ரீமதஹோபில ந்ருஸிம்ம மூர்த்திகளை யெல்லாம் ஓரே ஆஸ்தானத்திலெழுந்தருளப்பண்ணி, விசேஷ ஆராதனம் செய்த ருள, ஆராதன ஸமயத்தில் அம்மூர்த்திகளில் ஒருவரும், மாத்ராங்குலாஷ் டக பரிமிதராய், வாமாங்கத்தில் பெரியபிராட்டியாராலே அலங்கிருதராய்

ததாலிங்கன வியாபிருத வாமபாஹுகராய், அபயமுத்ராஞ்சித தக்ஷிணபாஹுகமலராய், சங்கசக்ராதிலாஞ்சித அபரஹஸ்த கிஸலயராய், பாதுகாலங்கிருத சரணயுகளராய், திருவடிகளை வருடாநின்ற பெரிய திருவடியையுடையவராய், சத்ரீபூதபணமண்டலரான திருவனந்தாழ்வானாலே அலங்கிருத உபரிபாகருமான ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்மன் ஸ்ரீசடகோபஜீயரிடம் விசேஷ கடாக்ஷத்தைச்செய்தருள, ஸ்வாமியும்அந்த ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்மனை தனியே அங்கிருந்த ஸ்ரீபாஷ்யகாரர் ஸனனிதியில் எழுந்தருளப்பண்ணி அவரை ஆராதிக்கத்துடங்கலானார். அன்றே இப்பொழுது இப்பரதகண்டத்தில் அஸாதாரணமான ஆசார்யஸ்தானமாகவும், பிரபல மடமாகவும், விளங்கி வரும் ஸ்ரீஅஹோபிலமடம் ஸ்தாபிதமாயிற்று. அஹோபிலம் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்மனை முக்கியமாகக்கொண்டு இந்தமடம் ஏற்படுத்தப்பட்டதால் இன்னும் இந்தமடம் ஸ்ரீஅஹோபிலமடமென வழங்கப்பெற்று வருகிறது. ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்மனுடைய திவ்யாஜ்ஞையால் அன்றுமுதல் இந்தமடம் மேன்மேலும் அபிவிருத்தியடைந்து இந்த ஆஸ்தானத்தைப் பல மஹான்கள் பரிபாலித்துவந்து ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தைத் தழைக்கச்செய்திருக்கின்றனர்.

ஸ்ரீசடகோபஜீயர் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்மனை ஆராதிக்கத்துடங்கியது முதல் ஸ்ரீ அஹோபில திவ்யதேசத்தெம்பெருமான்கள் ஸன்னிதி அதிகாரம் ஜீயரிடம் ஒப்புவிக்கப்பட்டு அந்த ஸந்நிதி அன்றுமுதல் ஸ்ரீ அஹோபிலமடத்திற்கு சொந்தமாயிற்று. ஸ்வாமிக்கு பூர்வாச்ரமத்தில் ஸம்பிரதாயப் பிரவசனத்தைக்குறித்தும் லோகோத்தாரணத்தைக் குறித்தும் ஏற்பட்ட தோற்றங்களை அவர் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்மனுக்கு புருஷகாரமாக விருந்தே நிறைவேற்றிவைக்க இப்பொழுது ஸந்தர்ப்பம் ஏற்பட்டது. ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்மன் திவ்யாஜ்ஞைப்படி இனிப்பிரதி நகரம் கிராமந்தோறும் எம்பெருமானை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போய் ஆச்ரித ஜனங்களுக்கு திருவிலச்சினை, மந்திர மந்த்ரார்த்தப் பிரதிபாதனம், பரந்யாஸம், முதலிய உஜ்ஜீவன வியாபாரங்களைச் செய்யுமாறு ஸ்வாமி புறப்பட்டார். ஸ்வாமியின் தேஜோமஹிமையும், அனுஷ்டான வைலக்ஷண்யமும், விசேஷஜ்ஞானமும், எங்கும் பரவலாயிற்று. அக்காலத்தில் தக்ஷிண தேசத்தில் பிரதானமாகவும், விந்தியபர்வதம் முதல் கன்யாகுமரி வரை பரவியதாகவும், விஜயநகரத்தைத் தலைநகராகக்கொண்டதுமான விஜய நகரம் ஸமஸ்தானத்தின் அதிபதியானவன் ஸ்வாமியின் ஜ்ஞானாதிசயங்களைக்கேட்டுஅவரையும் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்மனையும் ஆசிரயித்தே மோக்ஷோபாயத்தைப்பெறவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு ஸ்வாமியைத் தம் தலைநகருக்கு எழுந்தருளப்பண்ணி சிங்கவேழ் குன்றுடையானை வெகு காலம் ஆராதித்துவந்தான். ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்மனுக்கு விசேஷமாக சத்ர

சாமராதிபரிஜன பரிச்சதங்கள் அளிக்கப்பட்டன. ஸ்வாமியும் தென்னாட்டிற்கு ராஜகுருவாக விளங்கலானார்.

இந்த விஜயநகரம் ஸிம்ஹாஸனத்தில் சிலகாலத்திற்குப்பின் ஆண்டுவந்த சக்கிரவர்த்தியான கிருஷ்ணதேவராயர் (1509-1530 கி. பி.) 'ஆமுக்த மால்யதா' என்றும் 'விஷ்ணுசித்தீயம்' என்றும் பிரஸித்திபெற்ற ஒரு காவ்யத்தை தெலுங்குபாஷையில் இயற்றியிருக்கிறார். அதில் 6-வது ஆச்வாஸத்தில் கைசிகபுராணம் எடுத்துச்கூறப்பட்டிருக்கிறது. ஆங்கு சோமசர்மா பிரம்மரக்ஷஸ் நீங்கி ஸித்தனானபொழுது, ஜ்ஞானதிருஷ்டியால் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தின் பவிஷ்யத்விருத்தாந்தத்தை அவன் எடுத்துக்கூறுவதாக சில வாக்கியங்கள் காணப்படுகின்றன. அவ்விடத்தில் ஸ்ரீபாஷ்யகாரர், ஸ்ரீமந்நிகமாந்த தேசிகன், ஸ்ரீமதாதிவண்சடகோப மஹாதேசிகன், ஸ்ரீமணவாளமாமுனிகள் ஆகிய ஸ்வாமிகளைப்பற்றிக் குறிப்பிடுகையில் ஸ்ரீமதாதிவண்சடகோப மஹாதேசிகனைப்பற்றி விசேஷமான புகழ்ச்சி உரைகள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு,—

ఆముక్తమాల్యద - ఆశ్వాసము. 6.

"అతండ యిటమీఁద యాదవగిరి శెంకణంబు పాషండ సంకులంబుగావచ్చినఁ దచ్ఛ్యతికి శఠకోపసమాఖ్య సంభవించి నీరంధ్రవాదంబున నంధ్రాదివిషయ విద్వజ్జనంబుల నధోక్షజవిషయ వాదభిక్షవేఁడి దిగ్విజయంబు నేసి గరుడకుధర గుహాకుంఠ నృకంఠీరవంబు కుహనాత్రిదండియై బ్రుసీకుసుంభాంబరాంభఃకుండిక లాసంగ నంగీకృతాంతిమాశ్రముండై ఫణిప కణభుగక్షపాద బాదరాయణ కపిల జైమిని శాసనంబులు మతమహానస మహీసురులు మున్నుగా నెంతేవాసి నంతేవాసులకు దెలివి పజుపం బరమహంసానుష్ఠాన పరకాష్ఠయై పదయుగ ప్రపన్న భువన ప్రపంచ పంచజన హృదయభవనంబులం బద్మాపద్మాక్షులు పల్లేర్లు దడిచి పాడెకగ భక్తిబోధించి భూతలంబుఁ బావనంబు నేయంగలవాఁడు.

இதன் தமிழ்மொழிபெயர்ப்பாவது:-திருநாராயணபுரத்துக்கு ஸமீபத்தில் பாஷண்டிகள் அதிகரிக்கப் போகிறார்கள். அவர்களை நிரஸனம்செய்வதற்காக சடகோபர் என்று ஒருமஹான் அவதரிக்கப்போகிறார். அவர் ஆந்திரதேசம் முதலான எல்லாதேசங்களிலும் ஸஞ்சரித்து ஆங்காங்கு வித்வஜ்ஜனங்களுடன் வாதம்செய்து இதர மதத்தினரை ஜயித்து திக்விஜயம் செய்யப்போகிறார். கருடாத்ரியில் (ஸ்ரீஅஹோபிலகுகையில்)எழுந்தருளியிருக்கும்ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்மன் மாயாஸன்னியாஸியாய் அவருக்குத் திரிதண்ட காஷாய கமண்டலுகளைப் பிரஸாதித்து ஸன்னியாஸ ஆசிரமத்தை அளிக்கப்போகிறார். பதஞ்சலி, கணாத, கௌதம, வியாஸ, கபில, ஜைமினி, முதலானோரால் ப்ரணீதங்களான ஸமஸ்த சாஸ்திரங்களையும் தன்மடத்திலிருக்

கும் மாஹாநவீகர்கள் முதல்கொண்டு உலகிலுள்ள எல்லா சிஷ்யர்களுக்கும் உபதேசித்து அவர்களை அவற்றில் அதிகாரிகளாக்கப்போகிறூர். அவர் பரமஹம்ஸானுஷ்டான பராகாஷ்டையுள்ளவராய் தம் பாதார விந்தங்களில் ஆசிரயிக்கும் மஹாஜனங்களின் ஹிருதயத்தில் பெருமாளும் பிராட்டியும் நித்யவாஸஞ் செய்யுமாறு பக்தியைப்போதித்து பூமிமுழுமையும் பாவனமாக்கப் போகிறூர்.''

[கிஷ்ணதேவராய ரென்ற இந்த சக்கிரவர்த்தி அஹோபிலமட ஆஸ்தானத்தில் ஐந்தாவதுபட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீசடகோப ஸ்வாமியென்னும் அழகியசிங்கரின் சிஷ்யன். இந்த ராஜாவின் ஆஸ்தானவித்வானும் அஷ்டதிக்கஜங்கள் என்று பிரஸித்திபெற்றவர்களுள் பிரமுகருமான 'அல்லஸானி பெத்தனு' என்பவர் 'மனுசரித்திரம்' என்னும் தன் கிரந்தத்தில் இந்தஸ்வாமியையும் ரொம்ப புகழ்ந்திருக்கிறூர். இதே கவியின் மற்றொரு நூலான, 'ஹரிகதாஸார தத்தை' இந்தஸ்வாமிக்கே அங்கிதம் செய்திருக்கிறூர். ராஜா கவிக்கு ஸம்மானமாகக் கொடுத்த கோகடம் என்னும் அக்கிரஹாரத்துக்கு சடகோபபுரம் என்று பெயரிட்டிருக்கிறூர்.]

விஜயநகரம் ஸம்ஸ்தானத்திற்கு ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்மன் குலதெய்வமாகஇன்னும் விளங்கிவருகிறூர்.இவ்விதம் ஸ்வாமி தக்ஷிணதேசத்தின்உத்திர பாகத்தில் அரசன்முதல் ஸாமான்யன் வரையில்எல்லோரையும் பரமகிருபையால்ஸத்ஸம்பிரதாயமானஸ்ரீராமாநுஜஸித்தாந்தத்தில்சேர்த்து அவர்கள்உஜ்ஜீவிக்கும்வழியைக் காண்பித்துப்பின்புருஷோத்தமம்கர்நாடகதேசம்முதலியவற்றில் ஸஞ்சாரம்செய்து அங்கிருந்த மஹாஜனங்களையும் நல்வழிப்படுத்தி அங்கிருந்து தென்திசையைக்குறித்து எழுந்தருளினூர். இடையேயிருந்த பல திவ்யதேசத்தெம்பெருமான்களையும் ஸேவித்துக்கொண்டு ஆழ்வார்திருநகரியெழுந்தருள அங்கு ஆழ்வாரைக்காணுது வருந்தினூர். அங்கு அரசுபுரிந்த ஒரு சிற்றரசன் அன்னியமதத்தினனுதலின் ஆழ்வார் தேவஸ்தானம் முதலியவற்றை ஆக்ரமித்துக்கொள்ளவே அங்கிருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆழ்வாரையாவது பாதுகாக்கவேணுமென்ற சிரத்தையால், ஆழ்வாரை அந்த சிற்றரசனின் ராஜ்யத்திற்குப் புறமாக பலவிடங்களில் எழுந்தருளப்பண்ணியிருந்து அவ்விடங்களிலும் பயம் நேர, கடைசியாக மைசூருக்கு ஸமீபத்திலுள்ள திருக்கணும்பியென்னும் ஊருக்கு எடுத்துச்சென்றிருந்தனர். ஸ்ரீசடகோபஜீயரும் இவ்விருத்தாந்தத்தைக்கேட்டு ஸம்பிரதாயத்துக்கும் ஆழ்வாருக்கும் ஏற்பட்ட ஒரு துர்த்தசையைப்பார்த்து அதிதுக்கிதராய். மீண்டும் ஆழ்வாரை முன்போல் ஸ்தாபித்து, ஸம்பிரதாய

த்தை அங்கு வளரச்செய்ய முயற்சியெடுத்துக்கொள்வதென நிச்சயித்தார். அதற்காக இரண்டு உபாயங்களை ஸ்வாமி அனுஷ்டித்தார். அதில் முதலாவது,— ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தத்தின் மேன்மையை அன்யமதத்தினரான அந்த அரசனுக்கு எடுத்துரைத்து பரதத்வ நிர்ணயத்தை அவனுக்குப்போதித்து அவனைத் தம்வழிப்படுத்துவதென்றும், இரண்டாவதாக இவன் அவ்விதம் ஒழுங்குபடாவிட்டால் பெரிய ராஜாங்கமாகிய விஜயநகரம் ஸமஸ்தானம் மூலமாக அவனைக் கீழ்ப்படுமாறு செய்வதென்றும் நிச்சயித்தார். ஸ்வாமியின் உபாயமும் பலித்தது. அந்த சிற்றரசனும் ஸ்ரீஸ்வாமியிடம் சிஷ்யனாகி திருவிலச்சினை மந்திர மந்திரார்த்தங்களைப்பெற்று ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸம்பிரதாயத்தில் அதிகவிசுவாசமுள்ளவனானான். ஸ்ரீஜீயரும் பிறகு ஆழ்வாரெழுந்தருளியிருந்த இடம்சென்று அங்கிருந்து ஆழ்வாரை ஆழ்வார் திருநகரிக்கு மீண்டும் எழுந்தருளப்பண்ணி அந்த அரசன் மூலமாகவே திருப்பிரதிஷ்டையும் செய்து உத்ஸவாதிகளை நடத்தி அங்கே ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் ஆகிய ஆசார்யர்களைத் திருப்பிரதிஷ்டை செய்தார். அவ்வரசனும் கோயில் திருப்பணிமுடிந்த பின்னர் மேலமண்டபத்தின் வடபுறத்தில் இதன் ஜ்ஞாபகார்த்தமாக ஸ்ரீஜீயரின் பிரதிமையையும் கல்பித்தான். இதை இன்னும் நாம் பார்த்துவருகிறோம். இவ்விதம் ஜீயர் ஆழ்வார்முதலிய ஆசார்யர்களைப் பிரதிஷ்டைசெய்து ஸித்தாந்தத்தையும் பரவச்செய்ததின் பயனாக ஆழ்வார் ஸன்னிதியில் ஸ்வாமிக்கு விசேஷமரியாதைகள் ஏற்படுத்தப்பட்டன. அந்த திவ்யதேசத்தில் நித்யவாஸம்பண்ணும் ஆதிப்பிரான் விஷயமாயும் ஆழ்வார் ஆசார்யர்கள் விஷயமாயும் ஸ்வாமிபட்ட விலக்ஷணமான பரிசிரமத்திற்காக அவருக்குஆதிவண்சடகோபஜீயரென்னும் திருநாமம் ஏற்பட்டது. ஆழ்வார் தம் திருபையான ஹம்ஸமுத்திரையை ஸ்ரீஜீயரிடம் அளிக்கப்பட்டது. அம்முத்திரை யையே இன்னும் ஸ்ரீமடத்து முத்திரையாக உபயோகித்துவருகின்றனர். மேலும் திரவுகோல், குச்சிக்கோல் முதலிய ஸமஸ்ததேவஸ்தான பாரிவிருத்தியமும் இந்த ஸ்வாமியிடம் ஒப்புவிக்கப்பட்டது.முதல் தீர்த்தம், அக்கிரஸ்தானம் முதலிய மரியாதைகளும் அளிக்கப்பட்டன. மரியாதைகள் இன்றும்ஸ்ரீ அஹோபிலமட ஆஸ்தானத்தி லெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கர்களால் அனுபவிக்கப்பட்டு வருகின்றன. இந்தஸ்வாமி காலம்முதற் கொண்டு இன்றுவரையில் ஸ்ரீ அஹோபிலமட ஆஸ்தானத்தி லெழுந்தருளியிருக்கும் ஸமஸ்த ஸ்வாமிகளும் வைதிக லௌகிக வியவஹாரங்கள் எல்லாவற்றிலும் “ ஸ்ரீஶடகோபஶ்ரீ: ” என்றேதிருவெழுத்து சாற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ ஸ்வாமியும் இவ்விதம் அங்கு இதரர்களுக்கு அஸாத்யமான இக்காரியங்களைச் செய்துகொண்டு உத்தரதேசம் புறப்பட்டு திருவரங்கம் எழுந்தருளி பெரிய பெருமாளை மங்களாசாஸனம் செய்துகொண்டு, பெரிய பெருமாள் ஸன்னிதியின் ஸப்தப்ராகாரங்களையும் த்ருடப்படுத்தியும், கீழ த்வாரத்தில் ஒருகோபுரம் கட்டுவித்தும்; அக்கோபுரத் துவாரத்தில் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்மனுடைய பிரதிமையை ஏற்படுத்தியும், தசாவதார ஸன்னிதியைக்கட்டியும், அதிலே திருமங்கைமன்னனை ஸ்தாபித்தும், ஸ்ரீதேசிகனுக்கு ஸ்ரீரங்கநாச்சியார் ஸன்னிதியின் முன்பே தனிக்கோவில்கட்டியும், அதில் ஸ்ரீதேசிகனைத் திருப்பிரதிஷ்டைசெய்தும், அவருக்கு ஸர்வாராதனோபகரணங்களை அமைத்தும், அவருடைய நித்தியாராதனத்துக்கா கபடித்தனங்க ளுண்டாக்கியும், இம்மாதிரியான அநேகவித கைங்கர்யங்களைச்செய்வித்து அவ்விடத்திலேயே உபயவேதாந்த ப்ரவசனம் செய்துகொண்டு அநேக ஸம்வத்ஸரம் எழுந்தருளியிருந்தார். பிறகு திருக்குடந்தை முதலிய திவ்யதேசத்தெம்பெருமான்களையும் மங்களாசாஸனம் செய்துகொண்டு பெருமாள்கோவிலுக்கு எழுந்தருளி, அங்கு அத்திகிரிப் பேரருளாளன் ஸன்னிதியில் தேசிகனையும் பிரதிஷ்டைசெய்து அங்கு நூற்றுக்கால் மண்டபமொன்றையும் கட்டுவித்தார். ஸ்வாமி இந்த கைங்கரியங்களைச் செய்ததின் அடையாளமாக அம்மண்டபத்தில் இரண்டு ஸ்தம்பங்களில் எதிரெதிராக லக்ஷ்மீ ந்ருஸிம்மனையும் ஸ்ரீமதாதிவண்சடகோப ஜீயரையும் எழுந்தருளப் பண்ணியிருக்கின்றனர். பிறகு அங்கிருந்து ஸ்வாமி திருமலையெழுந்தருளி அங்கு திருவேங்கடமுடையானை மங்களாசாஸனம்செய்து ஜனங்கள் பெருமாளை ஸேவிக்கச்செல்லுகையில் அவர்களுக்கு ஏற்படும் கஷ்டத்தையுணர்ந்து மலையேறுவதற்கு சௌகரியமாயிருக்கும்படி ஸோபானத்தையும் ஏற்படுத்தினர். பிறகு சோளஸிம்மபுரம், திருநாராயணபுரம் முதலிய எல்லா திவ்யதேசங்களுக்கும் சென்று ஆங்காங்கு சத்ருநிரஸனம் செய்து ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தை நன்றாய் ஸ்தாபித்தார். இதற்குள் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்மனுடைய நித்தியாராதன ததீயாராதன காலக்ஷேபாதிகளுக்காக ஆங்காங்குள்ள சிஷ்யபரிஜனங்கள் மான்யங்களை ஏற்படுத்த அவற்றைப் பரிபாலிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை ஸ்வாமி மிகவும் விமர்சையாகச் செய்வித்தார்.

இவ்விதம் தமிழ், ஆந்திர, கர்னடக, மலையாளப் ப்ரதேசங்களாகிய தென்னடெங்கும் ஸ்வாமி ஸஞ்சரித்து ஆங்காங்கு பல்லாயிரக்கணக்கான

சிஷ்யர்களால் ஆசிரயிக்கப்பட்டு ஸ்ரீபாஷ்யகாரரால் ஏற்படுத்தப்பட்ட 74 ஸிம்மாஸனாதிபதிகளுக்கும் அத்யக்ஷராய் நமது ஸம்ப்ரதாயத்தில் "வநகாதவத்ரும் ஜகதஃ ப்ரஹர்ஷம்" என்று ஏகசத்ராதிபதியாய் விளங்கினார். இவ்விஷயம்.

" ஸ்ரீராமாநுஜ ஸம்வ்யூடாய பதவீடாநாம் சதுஸ்ஸப்ததி-
ஸ்ரீவைஷ்ணவ ஸிம்ஹாஸநஸ்தாம் ஸிம்ஹாஸநஸ்தாயிநாம் ।
ரக்ஷக ஶேஷவிதாம் ஸஶ்தாங்கம் ஶ்ரீஶட்யஸிம்ஹாஜ்ஞயா
ப்ராம்ஸம் வஹ்நிகோவ ஸம்யதியாரா யளமோயஶீஶஹி ॥ "

என்று ஸ்வாமிக்கு ஏற்பட்டிருக்கும் பிருது சுலோகத்தால் விளங்குகிறது. மேலும் தெற்கில் ஆழ்வார் திருநகரி முதலாகவும், வடக்கே சிங்கவேழ்குன்றம் முதலாகவும், ஸமஸ்த திவ்ய தேசத்தெம்பெருமான்கள் ஸன்னிதியிலும் முதல்மரியாதைகளையும் பெற்றார். அவர்சென்றவிடமெல்லாம் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்மன் ஸன்னிதியையும், அக்காலத்து ஆழ்வார் எழுந்தருளி யில்லாதஇடங்களில் ஆழ்வார் ஸன்னிதியையும் மற்றும்ஸ்ரீதேசிகன்ஸன்னிதியையும் ஸ்தாபித்து, அதன்மூலமாக நம்மாசார்யர்களை சிஷ்யஜனங்கள் ப்ரத்யக்ஷீகரித்து உஜ்ஜீவிக்கும்படியான பரமோபகாரத்தைச் செய்தருளினார். இதற்குக்கைம்மாறாக ஆங்காங்கு அவர் பரம்பரையில்வந்து கொண்டிருக்கும் ஆசார்யர்களுக்கும் இந்த ஸ்தலங்களில் இன்னும் அஸாதாரணமாக மரியாதைகள் செய்யப்பட்டு வருவதை நாம் பார்த்து வருகிறோம்.

இவ்விதம் எக்காரியத்திற்காக இந்த லீலாவிபூதியில் அவதரித்தாரோ அக்காரியத்தை ஸ்வாமி நன்கு நிறைவேற்றிவிட்டு தனக்குப்பின்னர் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்மன் ஆராதனத்திற்காகவும், சேதனர்களின் உஜ்ஜீவன வியாபாரத்தை நடத்துவதற்காகவும் தமது முக்கிய சிஷ்யர்களில் அக்ரேஸரான திருமலை நம்பாக்கம் கிருஷ்ணமாசார்யர் என்னும் ஸ்வாமிக்குத் துரியாச்ரமம் அளித்து, அவரை இந்த ஆஸ்தானத்தை நிர்வஹித்து வருமாறு நியமித்தருளி கலி 4560ம் வருஷத்தில் பஹுதான்யவருஷம், சித்திரை மாதம், கிருஷ்ண ஏகாதசியில் தம் அவதாரக்ஷேத்திரமான திருநாராயணபுரத்திலேயே இந்த லீலாவிபூதியைவிட்டு, நித்திய விபூதியை அலங்கரித்தார். ஸ்வாமியின் பிருந்தாவனம் திருநாராயணபுரத்தில் கல்யாணி புஷ்கரணீ தீரத்தில் செல்வப்பிள்ளை ஸன்னிதிக்குச் செல்லும் வழியில் அமையப்பெற்றிருக்கிறது. இந்த பிருந்தாவனத்திற்கு செல்வப்பிள்ளை பிரதி ஸம்வத்ஸரம் ஆறுதினம் எழுந்தருளி அர்ச்சாரூபமாக ஆங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்வாமிக்கு, ஆழ்வாருக்கு இருந்தவிடத்தில் திவ்யதேச

தெம்பெருமான்கள் ஸேவை ஸாதித்ததுபோல் இன்றும் ஸேவை ஸாதித்துவருகிறார். ஸ்வாமிக்கும் விசேஷமான மரியாதைகள் நடந்துவருகின்றன. திருவரங்கம், திருமலை, பெருமாள்கோயில், திருவள்ளூர், திருக்குடந்தை, திருவல்லிக்கேணி, ஆழ்வார்திருநகரி, ராஜமன்னார்கோவில், மதுராந்தகம், தேரிழந்தவூர் முதலான தென்னாட்டின் பலபாகங்களிலுமுள்ள திவ்யதேசங்களில் ஸ்வாமி அர்ச்சையாக வெழுந்தருளியிருந்து சிஷ்யகோடிகளுக்கு ஸேவை ஸாதித்து வருகிறார். ப்ரதிவருஷம் புரட்டாசிக் கேட்டையில் விசேஷ உத்ஸவங்களும் கண்டருளுகிறார்.

தனக்கென வாழாபிறர்க்குரியாரென்று மிகத்தூய்மை வாழ்க்கை நிகழ்த்திய இவ்வவதார புருஷனிடம் ஆசிரயித்தவர்களில் மிகப்ரதானமாக விருப்பவர்களைப்பற்றி இங்கு குறிப்பிடுவது அவசியமாகிறது. ஸ்வாமிக்குப்பின் இந்த ஆஸ்தானத்தை அலங்கரித்த திருமலை நம்பாக்கம் ஸ்ரீமந்நாராயணஸ்வாமியையும், வைதிக ஸார்வபௌமரென்று ஸ்வாமியினாலேயே அனுக்ரஹிக்கப்பட்டவரான மணல்பாக்கம் தோழப்பரையும்முக்கியர்களாகக் கூறலாம். இவ்விருவரும் ஸ்வாமியிடம் ஸ்ரீபாஷ்யம், ரஹஸ்யத்ரயஸாரம், பகவத்விஷயம் முதலிய கிரந்தங்களிலடங்கியுள்ள சாஸ்திரார்த்தங்களை நன்றாய் அதிகரித்து மஹாமேதாவிகளாகவிருந்தனர். மற்றும் இவர்களுக்கு ஸ்வாமியினிடத்தே ஸமஸ்தமான அன்வயமுமேற்பட்டது, இப்படி ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் திருவடிகளையே ஆசிரயித்து அவருடைய உபதேசித்திலிருந்தே மேற்கூறிய ஸ்ரீமந்நாராயணஸ்வாமி, தோழப்பர் முதலானோர் மஹாமேதாவிகளாகவும் ஸத்ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர்களாகவும், பகவத் ராமாநுஜஸித்தாந்த ஸ்தாபகர்களாகவும், அனைத்துலகும் புகழபெற்றதிலிருந்து இவர்களுக்கு ஆசாரியரான ஸ்வாமியின் தெள்ளறிவுப் பெருக்கும், பிறரை அறிவுடையோர்களாகச்செய்யும் தனித்தகவும், வெளியாவது மந்தமதியினருக்கும் கூட எளிதில் புலனாகும். ஆங்காங்கு ஸஞ்சாரம்செய்து ஸித்தாந்தப் பிரவசனம் செய்வதிலும் வாதங்களில்வென்று சத்ருநிரஸனம் . செய்வதிலும் எம்பெருமான் ஆழ்வார் ஆசார்யர்கள் ஸன்னிதிகளைப் பிரதிஷ்டை செய்வதிலும் ஸம்பிரதாய க்ரந்தங்களை சிஷ்யர்களுக்கு காலக்ஷேபம் ஸாதிப்பதிலும் தமது காலமனைத்தையும் ஸ்வாமி செலவிட்டு வந்தமையால் தாமே பூர்வாசாரியர்கள் அனுக்கிரஹித்த கிரந்தங்களுக்கு மேற்கொண்டு புதிதாக கிரந்தங்களைசெய்ய ஸாவகாசமின்றி தமது பிரிய சிஷ்யர்களான ஸ்ரீமந்நாராயணஸ்வாமியையும், தோழப்பரையும், வேதாந்த விஷயமாகவும், தர்மசாஸ்திர விஷயமாகவும், முறையே கிரந்தங்களை இயற்றுமாறு ஸ்வாமி நியமித்தார். அவர்களும் அந்நியமனத்தை சிரஸாவஹித்து பல கிரந்தங்களை இயற்ற ஸ்வாமியும் அவைகளைக் கடாக்ஷித்து, தம் கருத்திற்கிணங்கி அவையிருக்கக்கண்டு, தமது

சிஷ்யவர்க்கங்கள் அவற்றை ஏற்று நடக்குமாறு நியமித்தருளினார். ஸ்ரீமந் நாராயணஸ்வாமி வேதாந்தபரமாக 60 கிரந்தங்களைச் செய்தாரென்பது 'ஷஷ்டிப்ரபந்தநிர்மாதா' என்று அவருக்கு அளிக்கப்பட்ட பட்டத்தி லிருந்து தெரிகிறது. ந்யாஸதசகம், ந்யாஸதிலகம், ந்யாஸவிம்சதி இவற்றி ற்கு வ்யாக்யானம், ஸந்தியாவந்தன பாஷ்யம், புருஷார்த்த ஸுதாநிதி, தத்வ த்ரயம், ரஹஸ்யத்ரயம், ரஹஸ்யத்ரயஜீவாது, ஆளவந்தார் ஸ்தோத்ரவ்யாக்யா னம் பிரபஞ்சஸார ஸங்கிரஹம், திருவாராதன க்ரமம், முதலியவற்றை அவர் இயற்றிய கிரந்தங்களில் முக்கியமாகக்கூறலாம். தோழப்பர் ஸாதித்தகிரந்தங் களாவன,— கிருஹ்ய ரத்னம், கண்டபூஷணம், ஸ்ம்ருதி ரத்னாகரம், பிதிரு மேதஸாரம், அதன் வ்யாக்யானமான ஸுதீவிலோசனம், தசநிர்ணயம், ஆசௌச சதகம், இதன் வ்யாக்யானம், ஆகிய எட்டு. இந்த ஸ்வாமி செய் தருளிய கிரந்தங்கள் ஸ்ரீமதாதிவண்சடகோப மஹாதேசிகன் நியமனத்தை யனுஸரித்து இன்றுவரையில் பெரும்பாலான ஸாத்வீக ஸ்ரீவைஷ்ணவர்க ளால் அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது. ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு தோழப்பர் ஒருவரே பிரதான தர்மசாஸ்திர நிர்ணேதாவாக இருந்துவருகிறார். இவ ருடைய தர்ம சாஸ்திரங்கள் பாஞ்சராத்திராகமத்தை முற்றிலும் அனுஸரித் தவை. இவ்விதம் தமது ஜ்ஞானம் ஸ்திரமாக உலகத்திற்கு உப யோகமாக விருக்குமாறு ஸ்ரீமதாதிவண் சடகோப ஸ்வாமி தம்மால் பிரசித்தர்களான இவ்விரு சிஷ்யர்களைக் கொண்டு இக்கிரந்தங்களைச் செய்வித்து ஸம்பிரதாயத்துக்குப் பரமோபகாரம் செய்தது நமது பாக் கியமேயாகும். இவ்விரு பிரஸித்த சிஷ்யர்கள் தவிர, கடிகாசதம் அம்மா ளின் புத்திரரான ஸ்ரீவரதவிஷ்ணுவாசாரியரும் தமது தந்தையின் நியம னத்தை யனுஸரித்து ஸ்ரீஆதிவண்சடகோப ஸ்வாமியிடமே சம ஸ்தவேதாந்த சாஸ்திரங்களையும் காலக்ஷேபம் செய்து அவரை ஆச் ரயித்தார். ஸ்ரீவைஷ்ணவர்களில் வடகலை ஸம்பிரதாயத்தினர் அனைவரும் ஸ்ரீமதாதிவண் சடகோப மஹாதேசிகனைப் பரமாசாரிய னாகக் கொண்டாடிவருகின்றனர். இந்த ஸமூஹத்தினரனைவருக்கும் இவர் மூலமாகவே கிரந்த சதுஷ்டயத்திற்கும் காலக்ஷேப பரம்பரை வந்திருக் கிறது. தவிர தென்னாசார்ய ஸம்பிரதாயத்தினருக்கு முக்கிய ஆசாரியராக விளங்கிவரும் ஸ்ரீமணவாள மாமுனிகள் இந்த ஸ்வாமியினிடம் பிரைஷ மந்திரோபதேசம் பெற்று ஸந்நியாஸாசிரமமும் பெற்றுக்கொண்டாரென "யதீந்திரப் பிரவண பிரபாவம்" என்னும் நூலில் காணப்படும் கீழ்கண்ட வாக்கியங்களிலிருந்து தோற்றுகிறது:—

"அச்சமயத்தில் பெருமாள் ஸேவைக்கு விருத்தமான ஒரு ஆசௌச விசேஷத்தை தெற்கில் நின்றும் சிலர்வந்து விண்ணப்பம் செய்ய அது கேட்டு தென்னரங்கன்கழல் சென்னிவைத்துத் தானதில் மன்னியிருக்

கிற தமக்குத் தத்விச்லேஷம் அஸஹ்யமாய் அப்பொழுது சிந்தைசெய்து "ததா ஹி வைத்ருஷ்ண்யவதாத் வ்யக்தேஃ பவதி ஸர்வ ப்ருதி கண்டகாவஃ" என்கிறபடியே பகவதனுபவ விரோதிகளான பரிக்ரஹங்களெல்லாம் அத்யந்தம் பிரதிகூலமாகவே அறுதியிட்டு அப்போதே தனக்கு ஸப்பிரம்மசாரியான ஸ்ரீசடகோபஜீயர் பக்கல்சென்று அடியேனுக்கு திரிதண்ட காஷாயாதிகளை பிரசாதித்தருள வேணுமென்ற விண்ணப்பம் செய்ய இவரும் இசைந்து 'அஹம் ததேவ விஜ்ஞாய நர நாராயணம் நிரஞ்ஜநம் । த்யாஜ்யம் ஸர்வம் பரித்யஜ்ய த்யக்தும் ப்ராவிஶதாஶ்ரமம் ॥ என்கிறபடியே ஸர்வஸங்க பூர்வகமாக ஸந்நியஸித்தருளி அனந்தரம் திரிதண்ட காஷாயாதிகளையும் அவர் திருக்கையாலே உகந்து பிரஸாதிக்க இவரும் தரித்தருளி உத்தமா சிரமப்பிராப்தி பண்ண நிற்க அவ்வளவில் அவரும் இவருக்கு பிள்ளைத்திருநாமத்தை முன்னிட்டு ஸ்ரீ சடகோபஜீயரென்று திவ்யதிருநாமம் பிரஸாதிக்கப்பெற்று..........."

ஆகவே இக்காலம் இந்நாட்டிலுள்ள ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் ஸ்ரீ மதாதிவண்சடகோப மஹாதேசிகனிடம் ஆசார்யாங்வயம் பெற்றிருக்கின்றனர். ஸ்வாமியின் காலத்தில் தற்காலம் நம் ஸமூஹத்தைக் குலைத்து வரும் கலாபேதமாவது அல்லது சில்லரை ஸம்பிரதாய வைஷம்யங்களாவது சிறிதுமின்றி எல்லா ஸ்ரீவைஷ்ணவப்பிரமுகர்களும் இந்த ஸ்வாமியினிடம் ஸாக்ஷாத்தாக ஆசிரயித்து அவரனுக்கிரஹத்துக்குப் பாத்திரமானர்கள். ஆதலால் ஸ்ரீமதாதிவண் சடகோப மஹாதேசிகன் பெருமை ஸமஸ்த ஸ்ரீவைஷ்ணவர்களின் பெருமையென்னலாம். இவ்விதம் ஒருகுடையின் கீழ் வாழ்ந்த ஸ்ரீவைஷ்ணவராகிய நாம் இடையே தோன்றிய வைஷம்யங்களைவிட்டு எல்லோரும் ராமாநுஜீயா ளென்ற வெண்ணம்பெற்று ஆத்ம குண பரிபூர்த்தி யடைந்து உண்மை ஸ்ரீவைஷ்ண ஸ்வரூபமுள்ள வர்களாவோமாக. அதற்கு இந்தப் பரமாசார்யன் அருள்புரிவாராக.

## ஸ்வாமியின் தனியன்கள்.

"கேஶவார்ய க்ருபாபாத்ரம் தீஶமாதி குணார்ணவம் ।
ஶ்ரீஶடாரி யதீஶாநம் தேஶிகேந்த்ரமஹம் பஜே ॥
ப்ரபத்யே நிரவத்யாநாம் நிஷேவ்யம் குணஸம்பதாம் ।
ஶரணம் பவபீதாநாம் ஶடகோபமுநீஶ்வரம் ॥

---

ஶ்ரீராமாநுஜ ஸித்தாந்த நிர்தாரண பராயணஃ ।
ஶ்ரீவண்ஶடகோபாக்ய யதீந்த்ரோ ஜயதாம் புவி ॥

ஶுபமஸ்து.

சே. லக்ஷ்மீநரஸிம்மாசாரியன்.